முத்துவின் மாற்றம்....

பூஞ்சோலை என்ற கிராமம் எப்படி சிறந்த கிராமமாக மாறியது என்பது பற்றிய கதை



பாகம் - 3

பூஞ்சோலை என்ற கிராமத்தில் நிலவும் படிப்பறிவின்மை மற்றும் பழமைவாத எண்ணங்களை அங்குள்ள மக்களின் மனதிலிருந்து போக்குவதற்கு நகரத்தில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சேகர் என்ற படித்த உள்ளூர் இளைஞன் முயற்சிகள் மேற்கொண்டதைப் பற்றி இதுவரை நீங்கள் படித்துள்ளீர்கள். அந்த கிராமத்தில் உள்ளவர்களின் மனதிலுள்ள அணுசக்தி பற்றிய பயத்தையும் தவறான எண்ணத்தையும் அறவே அகற்ற வேண்டும் என்பதற்காக முத்து, விஜயா, ரமா, ரவி மற்றும் அக்கிராமத்தில் உள்ள இன்னும் சில நபர்களை தமிழ்நாட்டிலுள்ள மதராஸ் அணுமின் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருந்தான். அங்கு சென்று பார்த்த பிறகு தான் முத்து, விஜயா, ரமா, ரவி ஆகியோரின் மனதிலிருந்த அனைத்து கேள்விகளும் சந்தேகங்களும் பெருமளவில் நீங்கியது. அணுமின் நிலையத்தைப் பார்த்த பிறகு, அவர்கள் மகிழ்ச்சி நிறைந்த புன்னகையுடனும் வெளிவந்தனர். இதைப் பார்க்கும்போது அவர்கள் மனதில் தங்கள் கிராமத்தின் வளர்ச்சி பற்றிய எண்ணம் தோன்றத் தொடங்கியது தெளிவாகத் தெரிந்தது.

ஆகவே, பூஞ்சோலை என்ற கிராமம் மாற்றமடையுமா; முத்து மற்றும் அவனுடைய நண்பர்களாவது இந்த நிலைமையை மாற்றுவார்களா; மேலும் செழிப்பு மற்றும் முன்னேற்றம் அங்கு ஏற்படுமா என்பது பற்றி நாம் இப்போது பார்ப்போம்.

வாங்க, இந்த அற்புதமான மாற்றத்தை நாம் அனைவரும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் அனுபவிப்போம்.. ..



தமிழ்நாட்டிலுள்ள அணுமின் நிலையத்திற்கு சென்று பார்த்த பிறகு, சேகருடன் சேர்ந்து அனைத்து கிராம மக்களும் தலைவரின் வீட்டுற்கு அடுத்த நாள் சென்றனர்.







அடடே, வாங்க, வாங்க, வணக்கம்! உள்ள வந்து உட்காருங்க... அப்பறம், உங்களோட பயணம் எப்படி இருந்துச்சு? அந்த அணுமின் நிலையத்தை பார்த்ததற்கு அப்பறம் நீங்க எல்லாம் என்ன நினைக்கிறீங்க? உங்க எல்லோருடைய மகிழ்ச்சியான முகத்தைப் பார்த்தாலே நீங்க எல்லாரும் இந்தப் பயணத்தை நல்ல ரசித்த மாதிரித்தான் தெரியிது.. அப்படித்தானே, முத்து?







ஆமா, தலைவரே. அவங்க சொல்றது உண்மதான். நம்ம பையன் சேகர் இல்லேனா, இதுல எதுவுமே நடந்திருக்காது. ஒருவேளை எங்கள சேகர் இந்த அணுமின் நிலையத்திற்கு கூட்டி போகாம இருந்திருந்தா, அணுசக்தியோட ஆற்றல், பலனப் பத்தி எங்க யாருக்குமே தெரிந்திருக்க வாய்ப்பே இல்லாம போயிருக்கும்.

நெஜமா சொல்றோம், அணுமின் நிலையத்தை சுத்தி இருக்கிற பசுமையான இடம் ரொம்ப அழகா இருந்தது. உண்மைய சொல்லனும்னா, அந்த இடத்த விட்டு வர்ரதுக்கு எங்களுக்கு கொஞ்சம்கூட மனசே இல்ல.


ஆமா தலைவரே.. எந்தவிதமான வளர்ச்சியை அடைய முடியும், எப்படி கிராமம் முன்னேறும், எப்படி இந்த கிராமத்திலுள்ள மக்களின் வாழ்க்கைநிலை மாற்றம் பெறும் என்பதைப் பற்றி நாங்க இதுவரை கேள்விப்பட்டதே கிடையாது, தலைவரே.. இவை எல்லாத்தையும் பார்ப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு சேகர் தம்பி இருந்ததால் தான் நமக்கு கிடைச்சிருக்கு. அவருக்கு நாம் முதல்ல எல்லாரும் எங்களோட மனமார்ந்த நன்றியைத் தெரிவிச்சுக்கிறோம்.
ச்சே ச்சே, அப்படி எல்லாம் ஒன்னும் இல்ல அத்தை.....உண்மையை சொல்லனுமுனா, நீங்க எல்லாரும் நல்ல மனசோட நான் சொன்னதை எல்லாம் கேட்டு அணுமின் நிலையத்தைப் பார்க்க வர ஒத்துக்கிட்டதற்கு நான் தான் முதல்ல என்னோட நன்றியை சொல்ல கடமைபட்டுள்ளேன்.
உங்க எல்லாரையும்விட நான் தான் உண்மையில் ரொம்ப சந்தோஷமாக இருக்கேன்..... இப்ப சொல்லுங்க இந்த கிராமத்தின் வளர்ச்சிக்கு முன்னேற்றத்திற்கு பாடுபடுவதற்கு நீங்க எல்லாரும் தயாராக இருக்கீங்களா?
ஆமா, ஆமா, நாங்க எல்லாரும் தயாராகத் தான் இருக்கிறோம்...
ஆக, நம்ம கிராமத்துல ஒரு அணுமின் நிலையத்த கட்டப் போறாங்களா?
நிச்சயமா. இதுக்காக நீங்கள் எல்லாரும் தயாரா இருக்கனும்.. (சிரிக்கிறார்). ஆனா, சேகர், இதெல்லாம் எப்படி நடக்குமுன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா?





தாத்தா இதெல்லாத்தையும் என்கிட்ட விட்டுருங்க, நான் பாத்துக்கிறேன். போன வருஷம் நம்ம பூஞ்சோலை கிராமத்துக்குப் பக்கத்துல அணுமின் நிலையம் அமைக்கப் போறதா அரசாங்கம் முடிவு செஞ்சிருந்தாங்க. நம்ம கிராமத்தை சுத்தியுள்ள வறண்ட நிலப்பரப்பு அணுமின் நிலையம் ஏற்படுத்துவதற்கு ரொம்பப் பொருத்தமா இருந்தது. நாம எல்லாரும் இப்போ அரசாங்கத்திலிருந்து வந்துக்கிட்டு இருக்கிற அதிகாரிகளைப் பார்க்க காத்துக்கிட்டு இருந்தாலே போதும்.





நாம் அப்படி சொல்லல மாமா ... நா நேரா அங்க போயி அணுமின் நிலைய அதிகாரிகளுக்கிட்ட பேசி அவுங்கள நம்ம கிராமத்துக்கு கண்டிப்பா வாங்கனு சொல்லுவேன்.... ஆனா, இதுக்கு கொஞ்ச நாள் ஆனாலும் இதெல்லாம் நல்லபடியா நடக்கும்... நான் நாளைக்கே நகரத்திற்கு போயி கொஞ்ச நாள் கழித்து திரும்பி வந்துடுவேன்.. அதுவரைக்கும் தய்வுசெய்து காத்திருங்க....





சரி தாத்தா... இப்பவே நா போயாகனும்... சீக்கிரமா நா உங்கள திரும்பி வந்து பாக்றேன்... நா போயிட்டு வாரேன் தாத்தா...


தம்பி, ஆண்டவன் அருள் உனக்கு கிடைக்கட்டும்... (பிறகு எதிர்காலத்தைப் பற்றி மனதில் கனவுகளுடன் சேகர் தனது நகரத்திற்கும் கிராம மக்கள் எல்லாரும் தங்கள் வீட்டிற்குச் சென்றனர்)
சில நாட்களுக்குப் பிறகு, தொலைபேசி மணி டிரிங்-டிர்ங்.. டிரிங்-டிர்ங்.. டிரிங்-டிர்ங்.. என ஒலிக்கிறது.
அட, யாரா இருக்கும்? இவ்வளவு சீக்கிரமா காலையில யார் கூப்புடுறாங்க? சரி, எடுத்து யார்னுதான் கேப்போமே...
ஹலோ, தாத்தா... காலை வணக்கம். நான்தான் சேகர் பேசுறேன்... எப்படி இருக்கிறீங்க தாத்தா?
அடடே சேகரா! ஆண்டவன் அருள் உனக்கு கிடைக்கட்டும்... நா ரொம்ப நல்லாயிருக்கேன்... அதுபோகட்டும், இப்போ நகரத்ல எல்லாம் எப்படி போய்கிட்டு இருக்கு?
இங்கே எல்லாமே நல்லாயிருக்கு தாத்தா. நான் உங்களுக்கு இப்போ சந்தோஷமான ஒரு நல்ல செய்தி சொல்றதற்காகவே உங்களை கூப்பிட்டேன். தாத்தா, இன்ஜினியரிங் படிப்பை நான் நல்லபடியா முடிச்சுட்டேன் அப்பறம் நான் இப்போ ஒரு பெரிய கம்பெனியில வேலைக்கு சேரப்போறேன்.
அருமை அருமை! இது உண்மையிலே மிகவும் அற்புதமான நற்செய்திதான் எனக்கு. இன்னக்கி உன்னோட அப்பா அம்மா உயிரோட இருந்திருந்தா, இதைக் கேட்டு அவங்க ரொம்ப பெருமைப் பட்டிருப்பாங்க.
தாத்தா நீங்க என்னோட அப்பா அம்மாவைப் போல தான் அவங்களுக்கு சமமாகத்தான் நான் உங்கள நினைக்கிறேன்... அப்பறம், இன்னொரு விஷயம் தாத்தா... அடுத்த வாரம் அணுசக்தி துறையிலிருந்து சில அதிகாரிகள் நம்ம கிராமத்துக்கு பக்கத்துல அணுமின் நிலையம் அமைப்பது பற்றி ஓர் ஆய்வு செய்யனும்னு நம்ம கிராமத்திற்கு வரப்போறாங்கா. அதற்காக நீங்கள் எல்லாரும் தயாரா இருங்க, என்னால முடிஞ்சா நானும் உங்க கூட வந்து சேர்ந்துக்கிறேன்.

(ஒரு வாரத்திற்குப் பிறகு.. கிராம மக்கள் எல்லாரும் ஒன்றாகத் திரண்டு ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருந்தனர்... திடீரென அந்த இடத்திற்கு 3-4 கார்கள் வந்து நின்றது).



உண்மையிலேயே இது நம்ம கிராம மக்களுக்கு ஒரு நற்செய்திதான்! நா இப்பவே போயி நம்ம கிராம மக்கள் எல்லாருகிட்டேயும் சொல்லிடுறேன்... சரி தாத்தா.. மிச்ச எல்லாத்தையும் நான் கிராமத்துல வந்து உங்ககிட்ட நேராவே சொல்றேன்... இப்போ நா போன வைச்சறேன்... சரி, நீ உடம்ப நல்லா பாத்துக்கே அப்பறம் கவனமா இருந்துக்கனும், எதுக்கும் பயப்பட வேண்டாம், இறைவன் உன் பக்கத்திலே எப்போதும் இருப்பார்...





உங்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்! நாங்க எல்லாரும் அணுசக்தி துறையிலிருந்து வந்திருக்கோம். உங்க கிராமத்துக்கு பக்கத்துலதான் ஒரு அணுமின் நிலையத்தைக் கட்டனும்னு அரசாங்கத்துல முடிவு செய்திருக்காங்க... அந்தக் காரணமாகத்தான் நாங்கள் எல்லாரும் இங்க வந்திருக்கோம்...



அடடே அப்படியா விஷயம்... நாங்க எல்லாரும் உங்களை பூஞ்சோலை கிராமத்தின் சார்பாக அன்புடன் வரவேற்கிறோம்... தயவுசெய்து உள்ள வாங்க... யாருப்பா அங்க நிக்கிறது, இவுங்க எல்லாரும் உட்காருவதற்கு போதுமான நாற்காலிகளை சீக்கிரம் கொண்டு வாங்க (அவர்கள் எல்லோரும் நாற்காலியில் உட்காருகின்றனர்)



சொல்லுங்க, இந்த கிராமத்திலுள்ள நாங்க எல்லாரும் உங்களுக்கு எப்படி உதவி செய்யனும்னு தயசெய்து எங்ககிட்ட சொன்னீங்கனா, நாங்க அப்படியே செய்வோம்.



தலைவரே, இவரு பேரு குமார் அப்பறம் இங்க வந்திருக்கிற பிரபு, சங்கர், கிருஷ்ணன் மற்றும் நவீன் எல்லாரும் என்கூட ஒன்னா வேலை பார்க்கிற அதிகாரிகள்....

தலைவரே, நான் என்ன சொல்ல வர்ரன்னா பல வருஷமா நடத்துன ஆய்வுகளின் அடிப்படையில, உங்கள் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் அணுமின் நிலையம் கட்றதுக்கு ரொம்பவும் பொருத்தமான சூழல் இருக்குது... புவியியல்ரீதியா பார்த்தோமுனா, இப்பகுதிகளில நிலநடுக்கம், சுனாமி போன்ற எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. அதையும் தாண்டி, இங்கே இருக்கிற நிலம் எல்லாமே அந்த அளவுக்கு வளம் இல்லததனால, இந்த கிராமத்துல வாழ்ந்துக்கிட்டு இருக்கிறவுங்க வாழ்க்கையும் இது எந்த விதத்திலும் பாதிக்காது... அப்பறம் யாருடைய நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்றாங்களோ அவுங்ளுக்கு அதற்கான இழப்பீட்டு தொகையை கொடுத்துடுவாங்க...

அப்பறம் தலைவரே... இன்னொரு விஷயம்... இந்த கிராமத்துல அணுமின் நிலையம் கட்டுறதால இது உங்க கிராமத்துக்கு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கொண்டு வரும்.... உலோகம் கலந்து போடப்பட்ட சாலைகள் (மெட்டல்சாலைகள்), கழிவுநீர்பாதைகள், குடிதண்ணீருக்கான முறையான ஏற்பாடுகள், கழிவறைகள் என எல்லாமே உங்களுக்கு கட்டித்தருவாங்க... இது உண்மையிலேயே உங்க எல்லோட வாழ்க்கையையும் சிறப்பாக மாற்றிவிடும்...

ஆமா, தலைவரே, இதையும் தாண்டி, இந்த கிராமத்துல படித்தும் வேலையில்லாம இருக்கும் உங்க இளைஞர்களுக்கு, வேலைக்கு ஆளெடுக்கும்போது அவுங்கவுங்க கல்வித் தகுதி அடிப்படையில முன்னுரிமை கொடுத்து நல்ல வேலை கிடைக்கிறதுக்கு நிறைய வாய்ப்புகளும் இருக்கு..

அப்பறம், உங்க கிராமத்துக்கும் அக்கம் பக்கத்துல இருக்கிற மற்ற எல்லா கிராமங்களுக்கும் போதுமான அளவு மின்சாரம் கிடைக்கும், ஆகவே, இதைக் கொண்டு நீங்க விவசாயம் செய்றதுக்கு ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதை இதற்கு உபயோகித்துக் கொள்ளலாம். இப்படி செய்தீர்கள் என்றால் உங்க வயலிலிருந்து உங்களுக்கு கிடைக்கும் மகசூலும் அதிகமாக இருக்கும்.

ஆமா ஆமா, இதையும் தாண்டி, உங்க கிராமத்திலுள்ள குழந்தைகளுக்காக ஓர் பள்ளிக்கூடமும் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையும் கட்டித் தருவாங்க... அதற்கு அப்பறம் கல்வி மற்றும் சிகிச்சைக்காக நீங்க யாரும் நகரத்திற்கு போக வேண்டிய அவசியமே இருக்காது...

எங்க எல்லாருக்கும் உங்க எல்லாருடைய ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே எவ்வளவு சீக்கிரம் அணுமின் நிலையம் கட்டுறதுக்கான வேலையத் தொடங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எங்களால வேலையைத் தொடங்க முடியும்...



இது உண்மையிலேயே எங்க எல்லாருக்கும் கிடைத்த அதிஷ்டம்தான்... இந்த கிராமத்துல இருக்கிற நாங்க எல்லாரும் உங்களுக்கு ஆதராவாக இருப்போம்... நீங்க எவ்வளவு சீக்கிரம் வேலையைத் தொடங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வேலையைத் தொடங்குங்க... உங்க எல்லாருக்கும் எங்க எல்லாருடைய ஒத்துழைப்புஎப்போதுமே இருக்கும்... அதப் பத்தின கவலையை இப்போதே விட்டுடுங்க.. அடுத்த தடவ நீங்க வரும்போது. என் பேரன் சேகரை உங்களுக்கு நா அறிமுகப் படுத்தி வைக்கிறேன்.



அடடே சேகரைப் பத்தியா சொல்றீங்க... அவர எங்களுக்கு நல்லாத் தெரியுமே.. உண்மையை சொல்லனும்னா அவர் தான் எங்ககிட்ட வந்து உங்க எல்லாரையும் நேரா பார்த்து பேசும்படி கேட்டாரு... இதை நா சொல்றதுக்கு சுத்தமா மறந்தே போயிட்டேன்... இருந்தாலும் பராவாயில்ல, அடுத்த தடவை அவர் கண்டிப்பா எங்கள பார்ப்பாரு... சரி தலைவரே, நாங்க எல்லாரும் போயிட்டு மறுபடியும் வந்து உங்கள பார்க்கிறோம்... போயிட்டு வாரோம் தலைவரே... (அதன் பிறகு கிராமத்திலுள்ள அனைவரும் தலைவரும் அவர்களுக்குள்ளே பேசிக்கொண்டனர்)

(சில நாட்கள் கழித்து... தலைவரின் வீட்டின் முன்னால் கிராமத்தில் உள்ளவங்க எல்லாரும் ஒன்னா கூடியிருந்தாங்க... அப்பத்தான் மறுபடியும் 2-3 கார் அந்த இடத்தில் வந்து நின்றது... அதிலிருந்து சில அதிகாரிகள் இறங்கி தலைவரின் வீட்டுக்கு வந்தாங்க)



வாழ்த்துக்கள், தலைவரே... எப்படி இருக்கீங்க?



அடடே, வாங்க வாங்க, முதல்ல உள்ள வாங்க... நா ரொம்ப நல்லா இருக்கேன்...



தலைவரே, இந்த முறை உங்க நிலத்தை அளவெடுப்பதற்காக தாசில்தார் (மாவட்ட ஆட்சியாளர்) எங்ககூட வந்திருக்காரு... அதனால தயவுசெய்து உங்க நிலத்தைப் பற்றி உங்ககிட்ட இருக்கிர எல்லா ஆவணங்களையும் தாங்க தலைவரே...



சரி, தலைவரே...

(அதன் பிறகு, அனைத்து கிராம மக்களும் தலைவரின் வீட்டில் கூடி அவுங்கவுங்க நிலம் தொடர்பான ஆவணங்களை தாசில்தாரிடம் கொடுத்தனர்) தாசில்தார் அவர்களே உங்க வேலை நல்லபடிய முடிஞ்சிருன்னு நான் நினைக்கிறேன்...







ஆமா, ஆமா... ரொம்ப நன்றி, தலைவரே!

சரி, தலைவரே நாங்க இப்போ கிளம்புறேம்.. மறுபடியும் நாங்க சில நாட்கள் கழித்து உங்கள வந்து பார்க்கிறோம்... எங்களுக்கு இதப் போல நிறைய கிராமங்களுக்கு போயி அங்கிருந்து ஆவணங்களைச் சேகரிக்கனும்... நாம எல்லாரும் சுமார் ஒரு மாதம் கழிச்சு மறுபடியும் சந்திக்கலாம்...



நல்லபடியா போய்டு வாங்க.



(ஒரு மாதம் முடிந்த பிறகு, அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு கிராமத்திற்கு வந்து.. அவர்கள் எல்லாரும் தலைவரின் வீட்டுக்கு போனாங்க...)

வணக்கம் தலைவரே.. எப்படி இருக்கிறீர்கள?



அடடே, வாங்க வாங்க... உள்ள வாங்க... உங்கள பார்த்தலுல எனக்கு ரொம்ப சந்தோஷம்... உங்களுக்காக நாங்க இப்போ என்ன செய்யனும்னு சொல்லுங்க...



தலைவரே, உங்க கிராமத்துல இருக்றவுங்க எல்லாரோட முழு விபரங்கள நாங்க பெற்றோம்... அப்புறம் அத அடிப்படையா வைத்துதான் அவுங்க எல்லாருக்கும் அவுங்கவுங்க நிலத்திற்கான தொகையை நாங்க முடிவு செய்திருக்கோம். அந்தத் தொகையை உங்ககிட்ட கொடுக்க தான் இப்போ நாங்க வந்திருக்கோம் அப்படி கொடுத்தால் தான் நாங்க உங்க கிராமத்துல அணுமின் நிலையம் தொடங்க வேண்டிய எல்லா வேலையையும் சட்டப்படி செய்ய முடியும்....



ஆகா, மிக அருமை! உண்மையிலேயே இது எங்களுக்கு ஒரு நல்ல செய்திதான்... நீங்க எந்தவழியில, எப்படி செய்யனும்னு நினைக்கிறீங்களோ, அப்படியே செய்யுங்க... அதற்கு நாங்க எல்லாரும் தயாரா இருக்கிறோம்...



(அதன் பிறகு, அணுசக்தி துறையிலிருந்து வந்திருந்த அதிகாரிகளால் மாவட்ட மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் கிராம மக்கள் எல்லோருக்கும் அவுங்கவுங்க நிலத்திற்கான தொகை காசோலையாகக் கொடுக்கப்பட்டது...)

தலைவரே, அணுசக்தி துறையின் சார்பாக எங்க அரசாங்கத் திட்டத்திற்கு நீங்க எல்லாரும் ஒத்துழைப்பு கொடுத்துக்கு நன்றி சொல்ல நாங்க கடமைப்பட்டிருக்கோம். இந்த கிராமத்துல இருக்கிற எல்லாருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிச்சுக்கிறேன்.

இன்னும் ஒரு சில நாள்ல நாங்க எங்க வேலையைத் தொடங்கிடுவோம்... இந்த வேலையைத் தொடங்கி அடிக்கல் நாட்ட நீங்க எல்லாரும் தயசெய்து வருமாறு உங்க எல்லாரையும் அன்புடன் நாங்க கேட்டுக்கிறேம்... அப்பத்தான் நம்ம நாட்டோட வளர்ச்சியில நீங்க ஒவ்வொருத்தரும் ஒரு கூட்டாளியா இருக்க முடியும்.





கண்டிப்பா நாங்க எல்லாரும் வந்திடுறோம்... முத்து நீ என்ன சொல்ற?



கண்டிப்பா, தலைவரே, உண்மையிலேயே இது நம்ம எல்லாருக்கும் பெருமை தரக்கூடிய ஒரு விஷயம்தான். நாங்க எல்லாரும் கண்டிப்பா வருவோம்... (நிலத்திற்கான காசோலைகளைக் கொடுத்த பிறகு, அதிகாரிகள் சென்று விட்டனர் மேலும் சில நாட்கள் கழித்து அந்த இடத்தில் வேலையும் செய்யத் தொடங்கினர்)


வேலை செய்யும் இடத்தில் ஓர் காட்சி: (கிராம மக்கள், அதிகாரிகள், வேலை செய்வோர்கள் ஆகியோர் உள்ளனர் மேலும் பெரிய கிரேன்கள், செங்கள், கற்கள், மணல், இரும்பு கம்பிகள் போன்றவையும் உள்ளது)





வாங்க, வாங்க! இந்த இடத்திற்கு உங்க எல்லாரையும் நான் வரவேற்கிறேன்! தலைவரே, நாங்க கட்டப்போகும் இந்த அணுமின் நிலையத்துக்கான முதல் கல்ல உங்க கிராமத்து மக்கள் தான் எடுத்து வைக்கனும்னு நாங்க எல்லாரும் ஆசைப்படுறோம்...

ஐயா, வணக்கம்! இது எங்க எல்லாருக்கும் பெருமை தரக்கூடிய ஓர் விஷயம் தான்... வாங்க முத்து, உங்க கிராமத்ல உள்ளவுங்களுக்காக தயவுசெய்து முதல் கல்ல நீங்க தான் எடுத்து வைக்கனும்.





அட போங்கப்பா! இது சரின்னு எனக்கு தோனல... என்னால இதைச் செய்ய முடியாதுப்பா...



அப்படி இல்ல மாமா, ..இது உங்களுக்கு மிகவும் பெருமை தரக்கூடிய ஒரு விஷயம்.



(சேகர் கூறியதை ஒப்புக்கொண்டு முத்து கட்டிடத்திற்கான முதல் கல்லை எடுத்து வைக்க முயன்றதும், "கல்ல வைக்காதீங்க... அத நிறுத்துங்க... இந்த வேலைய உடனே நிறுத்துங்க... எந்த வேலையும் இங்கு செய்யக்கூடாது. உடனே இங்கேருந்து எல்லாரும் போயிடுங்க" என்ற ஓர் குரல் கேட்டது...)



அடடே, நமச்சிவாயம், லக்ஷ்மணன், தாமோதரன் மாதிரி இருக்கு! நீங்களா..? என்ன திடீர்னு நீங்கள் எல்லாரும் இங்க வந்திருக்கீங்க! நீங்க எப்படி வையாபுரி கிராமத்திலிருந்து இங்க வந்தீங்க... சரி, எதுக்கு நீங்க எல்லாரும் சத்தம் போடுறீங்க...?



இங்க பாரு முத்து, நீ செய்றது ஒன்னும் சரியில்ல. ஒன்னு சொல்றேன் கேட்டுக்கோ, இந்த இடத்ல அணுமின் நிலையத்தை கட்டுறதுக்கு நாங்க ஒருபோதும் விடமாட்டோம்...



ஆமா முத்து, நல்லா கேட்டுக்கோ, இங்க எந்த அணுமின் நிலையமும் கட்டக்கூடாது... அப்படி மீறி செஞ்சா, நாங்க எங்களோட உயிரைக் கூட தியாகம் செய்ய தயங்க மாட்டோம்... அத மனசுல வைச்சுக்க...



ஆமா, ஆமா, இங்க அணுமின் நிலையம் கட்னாங்கனா, இதிலிருந்து கதிரியக்கம் வெளியாகி அது எங்க எல்லாரோடைய வயல், நெற்களஞ்சியம் அப்பறம் எங்க வீடு மற்றும் எல்லா இடத்துக்கும் பரவிடும்... அது உனக்கு தெரியாதா...? அதையும் தாண்டி, இந்த கதிரியக்கத்தினால புற்றுநோய் மற்றும் பல நோய் வந்து நாம எல்லாரும் செத்துப்போயிறுவோம்...



ஆமா, ஆமா, நாம எல்லாரும் செத்துப்போயிறுவோம்... அதனால, இங்க எந்த வேலையும் செய்யக்கூடாது... நீங்க எல்லாரும் இந்த இடத்தை விட்டு மரியாதையா உடனே போயிடுங்க...



நண்பா... முதல்ல நீ கோபப்படுவத குறைச்சுக்கிட்டு நா சொல்றத கேளு... நீ சொன்னது மாதிரி எதுவுமே இங்க நடக்காது... அத முதல்ல புரிந்துகொள்... இதெல்லாம் உங்க மனசுல தோன்றியிருக்கிய வெறும் பயம்தான்...



அணுசக்தி ஆற்றல் பற்றி குதர்க்கத்தனமாக பல கருத்துக்களைக் கொண்ட ஒரு நபர் தலைவரின் முன் வந்து சத்தம் போட்டார்.

வாயை மூடுங்க தலைவரே! நானும் இங்க குடியிருக்கவர்களுல்ல ஒருத்தன்தான்... இதைப் பத்தியெல்லாம் உங்களுக்கு என்ன தெரியும்? நீங்க எல்லாரும் அறியாதவங்க, படிக்காதவங்க... இதெல்லாம் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? அணுமின் நிலையத்திலிருந்து வெளிவர்ற கதிரியக்கம் எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருக்கும்னு உங்களுக்கு கொஞ்சமாவது தெரியுமா?

இதைக் கேட்டதும், இன்னும் சில சமூக நல தொண்டு நிறுவனங்களிலிருந்து வந்திருந்த சிலரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்...

அவர் சொல்றது முற்றிலும் உண்மை... இங்க பாருங்க எங்களுக்கு மின்சாரம் தேவையில்ல... இந்த கிராமம் முழுதும் கதிரியக்கத்தால் அழிந்துதான் போகும்... அதனால நாங்க எல்லாரும் இதை எதிர்த்துப் போராடுவோம்... சொல்லுங்க நண்பர்களே, நான் சொல்றது சரிதானே?





ஆமா, ஆமா நீங்க சொல்றது சரிதான்? எது நடந்தாலும் சரி நாம எல்லாரும் அணுமின் நிலையத்தை இங்க கட்ட விடக்கூடாது... நாளையிலிருந்து நாம எல்லாரும் இங்க உட்கார்ந்துகிட்டே நம்மலோட எதிர்ப்பைப் தெரிவிப்போம்...



தயவுசெய்து அமைதியா நால் சொல்றதைக் கேளுங்க.... தயவுசெய்து எல்லாரும் முதல்ல உங்களுக்குள்ளேயே பேசிக்கிறதை நிறுத்திகிட்டு, அமைதியா உட்காருங்க...

நண்பர்களே, நீங்க பேசினதிலிருந்து என்ன தெரியுதுன்னா, இவுங்களும் இங்கு வந்திருக்கிற சமூகநல தொண்டு நிறுவனங்களின் ஆர்வலர்களும் அணுசக்தி பற்றிய உண்மையான தகவல்களை உங்களுக்கு சொல்லவே இல்ல... அதான் உண்மை... அதனாலத்தான் நீங்க எல்லாரும் அவுங்க சொன்ன பொய்யான விஷயங்களை நம்பி இதுக்கு எதிர்ப்பு தெரிவித்து இங்க திரண்டு வந்திருக்கீங்க.. லக்ஷ்மண மாமா, நான் உங்ககிட்ட ஒன்னு கேக்றேன் முதல்ல அதுக்கு பதில் சொல்லுங்க... "கதிரியக்கத்தைப் பற்றி உங்களுக்கு என்னென்ன தெரியும்...?"

நமச்சிவாய மாமா, அணுமின் நிலையத்தால தீங்கான விளைவுகள்தான் ஏற்படும்னு சொன்னீங்களே, அதப்பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?

தாமோதர மாமா, நீங்க சொல்லுங்க... உங்க படிப்பையெல்லாம் விட்டுட்டு இதை எதிர்த்து செயல்படுவதற்காக நீங்க எல்லார்கூட சேர்ந்து இங்க வந்திருக்கீங்க... நீங்க அறிவியல நல்ல படிச்ச ஒரு மாணவர் இல்லையா...? உங்க வாயிலிருந்து இந்த மாதிரி நீங்க பேசியது எனக்கு ரொம்ம வருத்தமா இருக்கு....



இங்க பாருப்பா! இங்க உள்ள எங்களுக்கெல்லாம் அணுமின் நிலையம் இங்க கட்டப்போறது கொஞ்சம் கூட பிடிக்கல... ஆக, நீ எங்க வழியில குறுக்க வராதே...



தம்பி, கொஞ்சம் வாயை மூடுறியா. நீங்க எல்லாரும் கூட்டமா வந்து இங்க என்ன சொன்னாலும் யாரும் முட்டாள் ஆக மாட்டாங்க... அதனால நீங்க இடத்தை காலி பன்றதுதான் உங்க எல்லாருக்கும் நல்லது...

அவுங்களப் பத்தி நீங்க ஏன் கவலைப்படுறீங்க? இது எங்களக்கும் அவுங்களுக்கும் சொந்தமான கிராமம். எது சரி எது தவறுன்று அவுங்களே முடிவு செய்யட்டும்...?இத்தன வருஷமா உங்க இனிப்பான பேச்சைக் கேட்டுத்தான் தவறான பாதையில வழிநடத்தப்பட்டிருக்கோம்... இதனால் முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக அதுக்கு முட்டுக்கட்டையாய் இருந்தோம்... இதனால இன்னக்கி நாங்க எல்லாரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில இருக்கிறோம்... இது உங்களுக்கேத் தெரியும்...







லக்ஷ்மண மாமா, நீங்களுமா இத எதிர்க்கிறீங்க? போன வருஷம் அத்தையோட புற்றுநோய்க்கு நகரத்திலுள்ள மருத்துவமனையில் கதிரியக்கத்தை உபயோகித்துதான் சிகிச்சை செய்தார்களுன்னு உங்களுக்குத் தெரியாதா? இன்னக்கி அத்தை எவ்வளவு ஆரோக்கியத்தோட சந்தோஷமாக இருக்கிறாங்க.. அவுங்களுக்கு கதிரியக்கத்தைக் கொண்டுதான் சிகிச்சையளிக்கப்பட்டது என்பதை நீங்க மறந்திடாதீங்க...



நமச்சிவாய மாமா, எக்ஸ்-ரே இயந்திரம் ஒருவேளை இல்லாம இருந்திருந்தா, ரெண்டு வருஷத்திற்கு முன்னாடி உங்க கால்ல ஏற்பட்ட எலும்பு முறிவை யாருமே பார்த்திருக்க முடியாது... சரியான சமயத்தில உங்களுக்கு அந்த சிகிச்சை கிடைக்காம இருந்திருந்தா, இப்போ நீங்க இங்கே நின்னு பேசிக்கிட்டு இருக்க முடியுமா?

இன்னக்கும்கூட நம்ம கிராமத்துல ஆயிரக்கணக்கான மக்களுக்கு சரியான நேரத்துல மருத்துவ வசதி கிடைக்காததனால நிறைய பேர் இறந்து போறாங்க.





நம்ம கிராமத்துல போதியளவு கல்வி புகட்ட பள்ளிகள் இல்லாததனால பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் இன்னமும் படிப்பறிவு இல்லாமலே இருக்கிறாங்க... இதனால தங்கள் வாழ்க்கையில மேற்கொண்டு எதுவுமே அவர்களால் செய்யமுடியல...

இப்பகூட நம்ம கிராமத்துல சுத்தமான சுகாதாரமான குடிநீர் கிடைக்காததனால ஆயிரக்கணக்கான பேர் வயிற்றுப்போக்கால் அவதிபட்டு இறந்து போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுராங்க... சில நேரத்துல அவுங்க தங்களோட வாழ்க்கையையே இழந்து போறாங்க. இப்பகூட நம்ம கிராமத்துல உலோகம் கலந்து போடப்பட்ட சாலைகள் (மெட்டல் சாலை) இல்லாததனால மழைநீர் நம்ம எல்லாரோட வீட்டுக்குள்ள வந்துடுச்சு... நல்ல சாலை மற்றும் கழிவுநீர் பாதை இல்லாலததனால காலரா, மலேரியா போன்ற பல நோய்கள் ஏற்பட்டு நூற்றுக்கணக்கானவுங்க இறந்துபோறாங்க...

இன்னக்கி வரைக்கும், இந்த நிலைமைய நினைச்சு யாரும் வருத்தப்பட்டதே கிடையாது... நாம எல்லாரும் கடந்த 60-65 வருஷங்களா இந்த நெகட்டிவ் மனநிலையால்தான் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்... கிராமத்த முன்னுக்கு கொண்டு வரனும்னு எப்ப எல்லாம் நாம சொல்றமோ... அப்பறம் எப்பபெல்லாம் நாம முன்னேறுறதற்கு நமக்கு ஒரு ஒளி தெரியுதோ அப்போதைக்கு உங்களைப் போன்றவுங்க சமூக ஆர்வலர்களுடன் சேர்ந்து நம்ம மக்கள் எல்லாரையும் தவறாகவே வழிநடத்துறீங்க...

நா உங்கள ஒன்னு கேட்கிறேன், இத்தனை வருஷத்துல உங்க எல்லாருக்கும் என்ன கிடைச்சுச்சு? வேறொன்னுமில்ல, உங்க எல்லாரையும் நீங்களே ஒருதடவை திரும்பிப் பார்த்துக்கோங்க... இப்போதைக்கு உங்க நிலைமை என்னனுன்னு பாருங்க... கிராமத்துல மின்சாரம் இல்லை... நம்ம குழந்தைகள் யாரும் படிக்க முடியல... சாயங்காலம் இருட்டாயிருச்சுனா கிராமத்துல யார்னாலையும் சமைக்க முடியல... நம்ம வயல்ள பயிர் விளைவிக்க முடியல... உங்களால நல்ல தரமான விதைகளை வாங்க முடியல... மேலும் வறுமையில வாடுறதுனால அதிக விலை கொடுத்து புதிய தொழில்நுட்பங்களை வாங்க முடியல. இப்படி வாழ்றது தான் உங்களுக்கு புடிச்சிருக்கா, சொல்லுங்க? உங்க குழந்தைகளும் இப்படியே வளர வேண்டும்னு விரும்புறீங்களா? இன்று, உங்களோட முன்னேற்றம் வளர்ச்சிக்காக யாரோ ஒரு நபர் முன்வரும்போது, நீங்க எல்லாரும் ஒன்று சேர்ந்து அவருக்கு எதிரா கொடி புடிச்சு போராடுறீங்க...

இப்படி நீங்க எல்லாரும் எதிர்த்துப் போராடுததனால உங்களுக்கெல்லாம் என்னதான் கிடைக்கும்? உங்க குழந்தைகளோட எதிர்காலத்தைப் பத்தி கொஞ்சம் யோசித்துப்பாருங்க... இன்னக்கி உலகம் முழுவதிமுள்ள மக்கள் நிலாவில் குடியேறனும்னு உத்வேகத்திற்கு ஏற்றார்போல செயல்பட்டுக்கிட்டு இருக்காங்க ஆனால் பூஞ்சோலை, வையாபுரி ஆகிய கிராமங்களிலுள்ள நம்மால இந்த பூமி வாழ்க்கையைக் கூட நல்லபடியா அமைச்சுக்க முடியல. இதற்கெல்லாம் நாமதான் பொறுப்புன்னு உங்க யாருக்கும் தோனலயா?





வாயை மூடு தம்பி... உன்னை மாதிரி நிறைய பேரை நாங்க ஏற்கனவே பார்த்திருக்கிறோம்... நீ பேசுற வெத்துப் பேச்சுனால எந்தப் பயனும் கிடைக்காது... இந்த கிராமத்தை எப்படி முன்னேற செய்யனும்னு எங்களுக்குத் தெரியும். இந்த கிராமத்த கண்டிப்பா நாங்க வளர்ச்சியடையச் செய்வோம்னு நான் உத்திரவாதம் தர்றேன்...

இங்க உள்ள கிராம மக்களுக்கு உங்க உத்திரவாதமெல்லாம் தேவையில்லை; அவுங்களுக்கு இது எப்ப நடக்கும் அப்டீங்கிற முடிவுதான் தேவை. உத்திரவாதத்தினால தான் இந்த உலகமே இயக்கிங்கொண்டு இருக்குனுக்கு சொன்னீங்கனா, நீங்க சொல்றதும் ஒத்துவரும். நா இப்ப உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுங்க பார்ப்போம்... கடந்த 60-65 வருஷமா நீங்க எங்களுக்காக என்ன செய்தீங்க? ஒவ்வொரு தடவையும் நீங்கள் உத்திரவாதம் கொடுக்கிறீங்க, வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள யாராவது செய்யும்போது அதத் தடுத்து மக்கள் எல்லாரையும் தவறாக வழிநடத்தி செல்றீங்க... அதுதான் உண்மை...





அப்பறம் ஒரு பெரும் தொழிலதிபர் துணி நெய்யும் ஆலையை நம்ம கிராமத்துல நிறுவ வரும்போது அதையும் நீங்க தான் தடுத்து நிறுத்தினீங்க... அப்பகூட இப்படித்தான் கிராமத்த நாங்க முன்னேற செய்வோம், அதை செய்வோம் இத செய்வோம் அப்டீன்னு உத்திரவாதம் கொடுத்து மக்களை நம்ப வைத்து ஏமாத்துனீங்க. இன்னைக்கு அந்த தொழில்சாலை நம்ம கிராமத்துல இருந்திருந்தா, கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கள் நம்ம கிராமத்துல எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கும். அப்படி கிடைத்திருந்தா இன்னக்கி நம்ம கிராமத்து மக்களின் வாழ்க்கைத்தரமும் எவ்வளவு உயர்ந்திருக்குமுன்னு நல்லா யோசிச்சு பாருங்க... நீங்க எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால அந்த தொழில்சாலை இப்போ வேற கிராமத்துல தொடங்கியிருக்காங்கா. நீங்க அங்க போயி அந்த கிராம எப்படி வளர்ச்சியடைந்துள்ளது என பார்த்துட்டு வாங்க அப்பத்தான் உங்களுக்கே தெரியும்... இந்த தொழில்சாலை அந்த கிராமத்துக்கு கிடைத்த அதிஷ்டத்தினால் அந்த கிராமமே மாறிவிட்டது... அத முதல்ல நீங்க தெரிஞ்சுக்கங்க

ஆக மொத்தத்துல, வளர்ச்சி, முன்னேற்றம் போன்ற வார்த்தைகளுக்கும் உங்கள் வாய்க்கும் உண்மையில் கொஞ்சம் கூட பொருந்தாது. இன்னக்கி நம்ம கிராமத்துல உள்ளவங்க எல்லாரும் விழிப்புணர்வோடு இருக்காங்க... இந்த தடவை நீங்கள் நம்ம கிராமத்துல உள்ள எங்க யாரையும் முட்டாளாக்க முடியாது.







அதனால, நீங்களும் உங்களோட வந்திருக்கிற சமூக ஆர்வலர்களும் இந்த இடத்தவிட்டு தயவுசெய்து போயிட்டீங்கனா நல்லா இருக்கும். இல்லைனா... எங்கள மன்னிசிடுங்க.. வேற எதாவது நாங்கள் செஞ்சிடுவோம்... நண்பர்களே நான் சொன்னது சரிதானே? ஆமா ஆமா, நீங்க சொன்னது முற்றிலும் சரி... அவங்கல முதல்ல போகச் சொல்லுங்க...

(கிராம மக்களின் கோபத்தைக் கண்ட பிறகு, அணுசக்தியை பற்றிய தவறான எண்ணம் கொண்டவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒருவர் பின் ஒருவராக அந்த இடத்தை விட்டு செல்லத் தொடங்கினர்...)



லக்ஷ்மன மாமா, அணுசக்தியைப் பற்றி நா உங்களுக்கு ஒன்று கட்டாயமாக சொல்லனும்... அதாவது அணுமின் நிலையத்திலிருந்து ஒருபோதும் கதிரியக்கம் வெளிவராது... இதிலிருந்து தயாரிக்கிற மின்சாரம் அதிக திறன் கொண்டது, சிக்கனமானது மேலும் இது ஆரோக்கியத்திற்கு தீங்கேதும் ஏற்படுத்தாது... அதற்கும் மேலாக, இதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பசுமையாகவும் சுகாதாரமாகவும் இருக்கும்... இதை நான் ஆதாரம் ஏதுமின்றி சும்மா சொல்லல... சில நாட்களுக்கு முன்னாடி, நாங்க எல்லாரும் மதராஸிலுள்ள அணுமின் நிலையத்தைப் போயிருந்தோம்... இதையெல்லாம் நாங்க எங்க கண்ணாலே பார்த்துட்டோம்... ஆக, நீங்க இப்போ நீங்க நல்லா ஒய்வெடுத்துங்கங்க... எல்லாமே நல்லபடியா நடக்கும், இல்லையா, முத்து மாமா?



ஆமா லக்ஷ்மனா, . சேகர் சொல்றது முற்றிலும் உண்மைதான். சில மாதங்களுக்கு முன்னாடி எங்களுக்குள் இருந்த அறியாமை மற்றும் மூடப்பழக்க வழங்களின் காரணமாக நாங்களும்கூட உங்களைப் போல்தான் பேசிக்கிட்டு இருந்தோம். சேகர் தம்பி தான் எங்களுக்கு உண்மையச் சொல்லி எங்க எல்லாருடைய கண்களையும் திறந்தார். சேகர் தம்பி பல்லாண்டு நலமாக வாழட்டும்... கடவுள் ஆசீர்வதிப்பாராக...

நன்றாகச் சொன்னாய் முத்து... ஒவ்வொரு கிராமத்திற்கும் சேகர் போன்ற ஒருவர் தேவை. அப்படி ஒருவரால் மட்டுமே ஒவ்வொரு கிராமத்து மக்களின் அறியாமையை நீக்கி அவர்கள் கண்களைத் திறக்க முடியும்... சேகர், நீ மிக நல்ல காரியம் செய்தாய்... உன்னை கடவுள் ஆசீர்வதிக்கட்டும்... (அதன் பிறகு, வையாபுரி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அந்த இடத்தைவிட்டுச் செல்லத் தொடங்கினர்)





அருமை! மிக அருமை!! சேகர் உன்னை நினைத்தாலே எங்களுக்கெல்லாம் மிகவும் பெருமையாக உள்ளது. இப்பிரச்சனையை நீ மிகவும் திறமையாக கையாண்டு தீர்த்து வைத்தாய்... உண்மையிலே நீ பெருமைக்கும் வாழ்த்துக்கும் உரியவன்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை...

அதன் பிறகு, முத்து கட்டிடத்திற்கான முதல் கல்லை எடுத்து வைத்ததும் ஒவ்வொருவரும் தங்கள் கைகளைத் தட்டி ஒருவரை ஒருவரை கட்டி அணைத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர். அதன் பிறகு, படிப்படியாக சில வருடங்கள் கழித்து அணுமின் நிலையம் அந்த இடத்தில் அமைந்துவிடும்.




ஒரு
வருடத்திற்குப்
பிறகு...

இரண்டு வருடங்களுக்குப் பிறகு...



மூன்று வருடங்களுக்குப் பிறகு...







நான்கு
வருடங்களுக்குப்
பிறகு...






ஐந்து
வருடங்களுக்குப்
பிறகு...

(ஐந்து வருடங்களுக்குப் பிறகு, பூஞ்சோலை கிராமத்தில் கட்டப்பட்ட அணுமின் நிலையம் இயங்குவதற்கு தயாராகியது... இறுதியில் அதற்காக திறப்பு விழா நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தயாரானது... அந்த இனிய பொன்நாளில் அந்த கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து பெருமை சேர்த்தனர்...)



அதன் பிறகு...

பூஞ்சோலை அணுமி




ின் நிலையம்



உங்கள் அனைவரையும் மனதார வரவேற்கிறோம். இந்தக் கிராமத்தில் அணுமின் நிலையம் கட்டுவதற்கு பல எதிர்ப்புகள் போராட்டங்கள் இருந்தபோதிலும் உங்களின் நம்பிக்கை மற்றும் இதைப் பற்றி நீங்கள் புரிந்துகொண்டதன் விளைவாகத்தான் இன்று இங்கே அணுமின் நிலையம் கட்டப்பட்டு அதற்கான திறப்பு விழாவும் சிறப்பாக நடந்து முடிந்தது. இதற்கு நீங்கள் அனைவரும் பாரட்டுக்குறியவர்கள், குறிப்பாக சேகர் அவர்கள் மிகவும் பாரட்டுதலுக்கு உரியவர்...

இந்த அணுமின் நிலையம் கட்டப்பட்ட பிறகு நம்ம கிராமம் மிகவும் செழிப்புடன் முன்னேற்றமடையும் என்பது நாம எல்லோருக்கும் ஆனந்தமான ஓர் விஷயம்தான். அப்பறம் நம்ம கிராமத்தில நாள் முழுவதும் மின்சாரம் இருக்கும். இதற்காக, நாங்க எல்லாரும் உங்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்...





(அதன் பிறகு, தலைவர், திறப்புவிழா ரிப்பனை வெட்டுகிறார்... பிறகு எல்லோரும் அணுமின் நிலையத்திற்குள் மகிழ்ச்சியுடன் சென்றனர்)


பூஞ்சோலை அணுமின் நிலையம்

(இதற்குப் பிறகு, ஒரு நாள், கட்டுமானத் திட்டங்களும் கிராமத்தில் தொடங்கியது... 2 வருடங்களுக்குள் பூஞ்சோலை என்ற கிராமம் பழைய நிலையிலிருந்து முழுவதும் மாற்றமடைந்தது.)

கட்டிமுடிக்கப்பட்ட சமுதாய மையத்தின் தோற்றம்




கட்டப்பட்ட
பள்ளிக்கூடத்தின்
தோற்றம்
தொடக்கப்பள்ளி


மருத்துவமனையின்
தோற்றம்
HOSPITAL


ஒரு நாள்.
அப்பா, எனக்கு அணுமின் நிலையத்ல வேலை கிடைச்சிருக்கு.
என்னது? நீ என்னப்பா சொல்ற? இதக் கேட்றதுக்கே ரொம்ப சந்தோஷமா இருக்கு. முதல்ல இதை நா எல்லார்கிட்டேயும் போய் சொல்றேன்...
(இதேபோல், பூஞ்சோலை அணுமின் நிலையத்தில் நிறைய பேருக்கு அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படியில் வேலை கிடைத்தது...)

(சில வருடங்களுக்குப் பிறகு, கிராமத்தின்
எல்லா பகுதிகளிலும் அதன்
முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி
தென்பட்டது மேலும்
கிராமத்திலுள்ளவர்களின் மகிழ்ச்சிக்கு
எல்லையில்லாமல் போயிற்று... தங்கள்
கிராமத்தின் இந்த வளர்ச்சியைக் கண்ட
ஒவ்வொருவரின் கண்ணிலும் ஆனந்தக்
கண்ணீர் பொங்கிய வழிந்தது...
பிறகு, ஒவ்வொருவரின் வாழ்க்கைத்
தரமும் கொஞ்சம் கொஞ்சமாக
முன்னேறத் தொடங்கியது...)



இறுதியில்...

சில வருடங்களுக்குப் பிறகு...



அருமை, முத்து மாமா! நீங்க ரொம்ப மாறிட்டீங்க... புது சட்டை, புது பேண்ட் புது காரு... ஆகா கலக்குறீங்க மாமா... என்ன மகிழ்ச்சியான ஆடம்பர வாழ்க்கை...

அருமை, ராமா அத்தை! நீங்க ஓட்டு வீட்லயா இருக்கீங்க? இது இன்னக்கி சூப்பரா இருக்கு! விஜயா அத்தை, இப்ப நீங்களும் உங்க வாழ்க்கையை இந்த கிராமத்தில நன்றாக அனுபவிக்கிறீங்கனு நினைக்கிறேன், இல்லையா, அத்தை?

ரவி மாமா, நீங்கள் எப்படி...? நீங்க சந்தோஷமா இருக்கீங்களா இல்லையா?







இவ்வாறாக, பூஞ்சோலை கிராமம் வெகு விரைவில் வளமான கிராமமாக மாறியது மேலும் இது மற்ற கிராமத்தில் உள்ளவர்களையும் ஊக்குவைக்கும் விதத்தில் அமைந்தது...

நிறைவு பெற்றது - வணக்கம்

- நண்பர்களே, இந்தியாவில் முத்து போன்றோரும் பூஞ்சோலை போன்ற கிராமங்களும் இருப்பதை நீங்கள் இன்னமும் காணமுடிந்த போதிலும் அவர்களிடதத்தில் அறியாமை மற்றும் மூடப்பழக்க வழக்கங்கள் மிகுந்து காணப்படுகிறது. இந்தக் கதையின் மூலமாக நாம் கற்றுக்கொண்டதைப் பின்பற்றி இந்தியாவை ஒரு வளமிக்க வல்லரசு நாடாக மாற்றுவோம்...

- வரலாறு என்பது உண்மைச் சம்பவங்கள் நிறைந்த ஒன்றாகும். உலகில் யாரேனும் ஒருவர் புதிய பொருள் ஒன்றைக் கண்டுப்பிடித்தார் என்றால் அதைப் பற்றி குறை கூறுபவர்கள் நிறைய பேர் உள்ளார்கள். உதாரணமாக அது நியூட்டனாக இருந்தாலும் சரி; ஐன்ஸ்டீனாக இருந்தாலும் சரி; ஜேம்ஸ் வாட்ஸ்-ஆக இருந்தாலும் சரி அல்லது தாமஸ் ஆல்வா எடிஷனாக இருந்தாலும் சரி.. தொடக்கத்தில், அவர்களைப் பார்த்து ஏளனம் செய்து சிரித்து அவர்களை இழிவு படுத்தினர். ஆனால் அவர்கள் இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு செயல்பட்டு இன்று அவர்கள் கொடுத்த பரிசுகள் உலகிற்கே வரப்பிரசாதமாக உள்ளது. ஆகவே, அவர்களை நாம் முன்மாதிரியாக வைத்து நிறையக் கற்றுக்கொண்டு அதைப் பின்பற்ற வேண்டும்.

நண்பர்களே!

- நீங்கள் உண்மையில் எதற்காவது எதிர்த்துப் போராட வேண்டும் என நினைத்தால், அறியாமைக்கு எதிராக போராடுங்கள்; மூடநம்பிக்கைகள், பழக்க வழக்கங்களுக்கு எதிராகப் போராடுங்கள்; அநீதிக்கு எதிராக குரல் கொடுங்கள் ஆனால் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்காதீர்கள்...

- இப்போது நாம் அனைவரும் ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம்: நாம் எந்த நேரத்திலும் தவறு செய்யக்கூடாது; அவைகள் எந்த சூழ்நிலையாக இருந்தாலும் சரி... தயங்கக் கூடாது... நமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கு நாம் வழிவகுப்போம்...

- நான் இப்போது இதுபோன்றுள்ள மற்றொரு கிராமத்திற்குச் செல்கிறேன்... அந்த கிராமத்தில் முத்துவைப் போலுள்ள ஒருவரைக் கண்டறிந்து நமது கிராமம் எவ்வாறு வளர்ந்து முன்னேற்றம் அடைந்ததோ அதோ போல் அங்கும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஏற்பட சரியான வழியைக் கூறுவேன்...

இப்போது இது உங்களுக்கான நேரம்...

வந்தே மாதரம்.

“அணுசக்தி... தேசத்தின் சக்தி
சுத்தமான சக்தி... சுகாதாரமான இந்தியா”



एनपीसीआईएल
NPCIL

பொதுநலன் கருதி வெளியிடப்பட்டது
இந்திய அணுமின் கழகம் (நியூக்ளியார் பவர் கார்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்)
(ஒர் இந்திய அரசு நிறுவனம்)

வெளியிடுவோர்
நிறுவன திட்டமிடல் மற்றும் நிறுவன தகவல்தொடர்பு இயக்குநரகம்
(டைரக்டரேட் ஆஃப் கார்போரேட் பிளானிங் அன்ட் கார்போரேட் கம்யூனிகேஷன்ஸ்) [CP&CC]
6-S-14, விக்ரம் சாராபாய் பவன், அணுசக்தி நகர், மும்பை - 400094
மின்னஞ்சல்: cpcc@npcil.co.in | இணையதளம்: www.npcil.nic.in